## 2024 ஃப்ரீடா கொரயா விருதுவழங்கும் விழாவில் 36 வெற்றியாளர்கள் விருதுகளை தட்டிச்சென்றுள்ளனர்

2024 ஃப்ரீடா கொரயா போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற 18 சாதனை பெண்கள் மற்றும் அவர்களின் கதைகளை முன்கொணர்ந்த 18 எழுத்தாளர்களும் கடந்த 2025 ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி BMICH ஜாஸ்மின் அரங்கில் நடைபெற்ற விருதுவழங்கள் விழாவில் கலந்துகொண்டு விருதுகளைப் பெற்றனர். இந்நிகழ்வில் வன்டா கொத்தலாவல பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன் கௌரவ அதிதியாக ஸ்ரீயானி ஹுலுகல்ல கலந்து சிறப்பித்தார்.




ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் வலுவூட்டல் மூலம் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் மேம்படுத்துவதற்காக மேற்கொண்ட முயற்சிகளுக்காக காமினி கொரயா நிதியத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தரங்களை கொண்டமைந்த கதைகளை கொண்டிருந்த வெற்றியாளர்கள் விருதுகளையும் பெறுமதிமிக்க பணப்பரிசில்களையும் பெற்றனர். பிரதானமாக மூன்று பிரிவுகளில் (குடும்பங்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தல், தொழில்முனைவு மற்றும் சாதனைகள்) போட்டிகளில் கலந்துகொண்ட போட்டியாளர்கள் காமினி கொரயா நிதியத்தினால் நியமிக்கப்பட்ட மதிப்பாய்வு குழுவால் மதிப்பெண்கள் வழங்கப்பட்டு மதிப்பிடப்பட்டனர்.

ஃப்ரீடா கொரயா விருதுகளானது குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட குடும்பத்தை சேர்ந்த பெண்களுக்கு வலுவளித்தல் மற்றும் நாட்டின் பொருளாதார மீள்கட்டுமானம் மற்றும் வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பை ஈடுபடுத்தும் வகையில் மறைந்த கலாநிதி காமனி கொரயா அவர்களின் தாயாரான மறைந்த ஃப்ரீடா கொரயா அவர்களின் நினைவாக 2023 ஆம் ஆண்டு முதல் இந்தசெயற்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. காமனி கொரயா நிதியமானது, இலங்கையை சேர்ந்த மகளிர் தங்களது வாழ்வில் எதிர்கொண்ட கடினமான பாதைகள் மற்றும் தடைகளை உடைத்தெறிந்து அவர்களின் குடும்ப நிலையை உயர்த்தியது மட்டுமன்றி தங்களது தொடர்ச்சியான முயற்சி மற்றும் படைப்பாற்றல் மூலம் சமூகத்தில் உயர்ந்துள்ளமையினை அடையாளம் கண்டு அவர்களை ஊக்குவித்து வருகிறது. இம்முறை அதன் தொனிப்பொருள் மகளிர் வலுவூட்டலாகும். நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட பெண்களை அடையாளம் கண்டு அவர்களின் கதைகளை முன்வைக்குமாறு எழுத்தாளர்கள்

கேட்டுக்கொள்ளப்பட்டனர். அவர்களின் விடாமுயற்சி மற்றும் சமூக-பொருளாதார தடைகளை கடப்பதில் அடைந்த சாதனைகள் ஏனையவர்களையும் பின்பற்ற தூண்டும் வகையில் இதன் நோக்கம்அமைந்திருந்தது.

இப்போட்டியின் இரண்டாம் கட்டமானது இதற்கு முன்னர் நடைபெற்ற கட்டம் I போலவே உத்வேகம் தரும் பெண்களின் கதைகள் பகிர்ந்து கொள்ளப்பட்டு அவர்களது வெற்றிக் கதை மற்றும் அவர்களின் கதை எழுத்தாளர்கள் அங்கீகரிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். பெண்களுக்கு வலுவளித்தல் மற்றும் நாட்டின் பொருளாதார மீள்கட்டுமானம் மற்றும் வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பை ஈடுபடுத்தும் வகையில் இலங்கைப் பெண்களின் பங்களிப்புகளை ஊக்குவிக்கும் இரண்டாவது ஆண்டாக முன்னிலைப்படுத்தப்பட்ட இவ்விருதுகள், தற்போது இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள பெண்களின் பங்கினை பறைசாற்றுகிறது. இருப்பினும், தற்போது, 33% பெண்கள் மட்டுமே தொழில்துறைகளில் தமது பங்களிப்பினை வழங்குகின்றனர். பெண்கள், நேரக் கட்டுப்பாடுகள் மற்றும் பிற காரணிகளால், நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கக்கூடிய அவர்களின் மறைந்திருக்கும் திறமைகள் முறையாக பயன்படுத்த முன்வருவதில்லை.

ஊடக அடிப்படையிலான ஆய்வுத் செயற்திட்டமாக நடாத்தப்பட்ட ஃப்ரீடா கொரயா விருதுகள் போட்டிகளானது, கிராமப்புறப் பெண்களை மேம்படுத்துவதற்கும், நாட்டின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களால் ஆன அர்த்தமுள்ள மற்றும் ஆக்கப்பூர்வமான பங்களிப்பைச் செய்வதற்கு தயார்படுத்துவதற்கும் பல புதிய வழிகளையும் வாய்ப்புகளையும் கண்டறிந்துள்ளது.

கதைகளை முன்வைக்கும்போது எழுத்தாளர்களால் சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் வெளிப்படும் கண்டுபிடிப்புகள் தொகுக்கப்பட்டு ஒரு அறிக்கை தயாரிக்கப்படும், இந்த அறிக்கையானது, எதிர்காலத்தில் பெண்களுக்கு அதிகாரமளிக்கும் வகையில் நாட்டின் கொள்கை வகுப்பாளர்களுக்கு அவர்களின் கொள்கை வகுப்பில் உறுதுணையாக இருக்கும். .